செ.வெ.எண்.20 நாள்.08.12.2017.

திருநெல்வேலியில் தமிழ்நாடு மாநில மூலிகை தாவர வாரியத்தின் மூலம் மாவட்ட அளவிலான மூலிகை தொழில் பங்குதாரர்கள் கூட்டத்தினை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை ஆணையர் திரு.மோகன் பியாரி,இ.ஆப., அவர்கள் துவக்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி, பாளையங்கோட்டை தலைமை சித்த மருத்துவ கல்லூரி கூட்ட அரங்கில், தமிழ்நாடு மாநில மூலிகை தாவர வாரியத்தின் மூலம் மாவட்ட அளவிலான மூலிகை தொழில் பங்குதாரர்கள் பயிற்சி கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.12.2017) நடைபெற்றது. இப்பயிற்சி கூட்டத்தினை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை ஆணையர் திரு.மோகன் பியாரி,இ.ஆப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இப்பயிற்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை ஆணையர் அவர்கள் பேசியதாவது-

தமிழ்நாடு மாநில மூலிகை தாவர வாரியத்தின் மூலம் மூலிகை பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும், விவசாயிகளுக்கு ஏற்றுமதி மற்றும் விற்பனை சந்தைகளை தெரிந்து கொள்ளும் வகையிலும், மாவட்ட அளவில் மூலிகை தொழில் பங்குதாரர்களின் ஒரு நாள் பயிற்சி கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில், மூலிகை பயிர்களின் சாகுபடி மற்றும் தேவைகள் குறித்து பல்வேறு மாவட்ட வன அலுவலர்களும், வேளாண்மைத் துறை அலுவலர்களும் இங்கு விரிவாக எடுத்துரைக்கவுள்ளனர். இதில் கலந்து கொண்டுள்ள விவசாயிகள் இப்பயிற்சியில் கூறப்படும் கருத்துக்களை தெளிவாக அறிந்து கொண்டு, மூலிகை பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், விற்பனை விவரங்களை அறிந்து கொண்டு பயன்பெற வேண்டும். மற்ற விவசாயிகளுக்கும் இதுகுறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மாவட்ட அளவில் நடத்தப்படும் இதுபோன்ற பயிற்சி கூட்டங்கள் மாநில அளவிலும் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பேசினார்.

பயிற்சி கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது-

இப்பயிற்சி கூட்டம் விவசாயிகளுக்கு மிகவும் உபயோகமான முக்கிய கூட்டம் ஆகும். இந்திய சித்த மருத்துவம் குறித்த சிறப்புகள் அநேக மக்களுக்கு இன்னும் தெரியாமல் உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகள் அதிகளவில் நெல் சாகுபடி செய்கின்றனர். மருத்துவ பயிர்கள் சாகுபடியில் நல்ல வருமானம் உள்ளதால், இதுகுறித்த விழிப்புணர்வினை இப்பயிற்சி கூட்டத்தின் மூலம் ஏற்படுத்திட வேண்டும். மூலிகை பயிர் உற்பத்தியை சந்தைப்படுத்தும் வழிகளையும், காட்ட வேண்டும். ஏற்றுமதி குறித்த விவரங்களையும், விவசாயிகளுக்கு தெளிவுப்படுத்திட வேண்டும். உலகளவில் இந்திய சித்த மருத்துவத்திற்கு சிறப்பான இடம் உள்ளது. இதை கருத்தில் கொண்டு விவசாயிகள் அதிகளவில் மூலிகை பயிர்களை உற்பத்தி செய்து பயனடைய வேண்டும். இப்பயிற்சி கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் மற்ற விவசாயிகளுக்கு பயிற்சியில் அளித்த கருத்துக்களை தெரிவித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் தமிழ்நாடு மாநில மருத்துவ மூலிகை வாரிய ஒருங்கிணைப்பாளர் திருமதி.எம்.இந்துமதி, தூத்துக்குடி துறைமுக போக்குவரத்து மேலாளர் திரு.ராஜேந்திரன், தூத்துக்குடி துறைமுக சுங்க தரகர் சங்கத்தலைவர் ஜெயந்த் தாமஸ், வேளாண் மார்க்கெட்டிங் /வேளாண் வணிகம் இணை இயக்குநர் திருமதி.பி.மேரி அமிர்தா பாய், அரசு சித்த மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.ஆர்.நீலாவதி, திருநெல்வேலி, மதுரை, விருதுநகர், கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்ட வன அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் அலுவலர்கள், சித்த மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்னடர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.